திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 08.02.2026

## மனிதாபிமானம்..!

மதிய நேரத்தில் சினிமாவிற்குப் போக வேண்டும் என்று தம்பி பிரியப்பட்டான். “மோட்டார் சைக்கிள் பழுதாகிவிட்டது தம்பி ” என்று சொல்லி தப்பிக்கப் பார்த்தேன். “சைக்கிளில் போகலாம் அண்ணே “ என்று அடம்பிடித்தான் தம்பி.

“அண்ணாநகரிலிருந்து மவுன்ட்ரோடு வரையும் சைக்கிள் மிதிக்கணுமேடா தம்பி.”

“நான் வேனும்ணா சைக்கிள் மிதிக்கிறேன் அண்ணே” என்று தம்பி சொல்ல…

“ஒண்ணும் வேணாம். நானே மிதிக்கிறேன். புறப்படு ” என்றேன்.

இருவரும் கிளம்பினோம். மிகவும் மகிழ்ச்சியாக சைக்கிளின் பின்னால் தொற்றிக் கொண்டான். போக்குவரத்து சிக்னலில் சைக்கிள் நிற்கிறபோது தம்பி இறங்கிக் கொள்வதும், பச்சை விளக்கில் வண்டி கிளம்புகிற போது தாவிப் பின்னால் உட்கார்ந்து கொள்வதுமாயிருந்தான்.

அப்படி ஒரு சிக்னலில் நான் காலூன்றி நின்றபோது, நம்ம சைக்கிளையடுத்து கை வண்டிக்காரர் ஒருவர் வேகாத வெயிலில், செருப்பில்லாத கால்களைத் தகிக்கிற தார்ச்சாலையில் பதித்து நிற்க இயலாமல் தவித்துக் கொண்டிருந்தார்.
ஒரு காலை ஊன்றி நின்று, மறுகாலுக்குத் தற்காலிகமாய்க் கொஞ்சம் ஆறுதலளிப்பதும், பிறகு இந்தக் காலை ஊன்றி அடுத்த காலை உயர்த்திக் கொள்வதுமாய் அவர் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்த போது, இவருக்கு ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் கொடுக்க முடிந்தால் எவ்வளவு புண்ணியமாக இருக்கும் என்று எனக்கு தோன்றியது.

போகிற பாதையில் ஏதாவது செருப்புக் கடைகள் இருக்கும். ஒரு இரப்பர் செருப்பின் விலை எவ்வளவு இருந்துவிடப் போகிறது. இரண்டு பேரும் சினிமாவுக்குச் செலவு செய்யப் போவதில் நாலில் ஒரு பங்குகூட இருக்காது என்று நினைத்துக்கொண்டே , ஒரு பாலம் ஏறி இறங்கியதுமே ஒரு செருப்புக் கடை கண்ணில் பட்டது.

“தம்பி. கொஞ்சம் இறங்குடா என்றேன்.”

“ஏண்ணே, சைக்கிள்ல காத்து இல்லியா?” என்று தம்பி கேட்க.

“அது இல்லடா தம்பி., நாம அந்த சிக்னல்ல நின்னுகிட்டிருந்தப்ப பக்கத்துல ஒரு கை வண்டிக்காரர் நின்னுகிட்டிருந்தாரே, கவனிச்சியா….!”

“ஆமா. அவருக்கென்ன? ”

“பாவம்டா அவர் கால்ல செருப்பில்லாம, வெயில்ல நிற்க முடியாமத் துடிச்சிட்டிருந்தார். அவருக்கு ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் கொடுத்துட்டுப் போவோம்டா.” என்றேன் நான்.

“படத்துக்கு லேட்டாயிருச்சுண்ணே. நேரா வண்டிய சினிமா தியேட்டருக்கு விடுங்க. செருப்பெல்லாம் இப்ப வாங்க வேண்டாம் ” என்று பின்னாலிருந்து இடித்தான் தம்பி.

*தம்பியின் இரக்கமின்மை எனக்கு ஏமாற்றமாயிருந்தது. கோபத்தையும் உண்டாக்கியது. கோபத்தை ஓரங்கட்டிவிட்டு சைக்கிளை ஓரங்கட்ட முற்பட்டேன்.*
*“சினிமாவுக்கு ஒரு அஞ்சு நிமிஷம் தாமதமா போனா அபராதம் ஒண்ணும் போட மாட்டாங்க. கொஞ்சம் இறங்கு.” என்றேன்.*

*“சொன்னாக் கேளுங்க அண்ணா... செருப்பெல்லாம் வாங்க வேண்டாம். வண்டிய எடுங்க ” என்று தம்பி சொன்னதைக்கேட்டு*
*என் கோபம் வெளிப்பட்டது .*

*“என்னடா தம்பி நீ. இப்படி மனிதாபிமானமே இல்லாம இருக்கியேடா, கஷ்டப்படுறவங்களுக்கு நம்மால முடிஞ்ச உதவிய செய்யல அப்படினா நாமலாம் என்னடா மனுஷங்க.. சொல்றத கேளுடா. சைக்கிள்ல இருந்து இறங்குடா.” என்றேன்.*

*“நான் சொல்றத. கேளுங்க அண்ணா, வண்டிய நிறுத்தாம ஓட்டுங்க. அவருக்குப் புதுசாலாம் செருப்புத் தேவையில்லை.” என்று தம்பி சொல்ல..*

*அவனுடைய பிடிவாதத்துக்குப் பணிந்து, சைக்கிளை வேண்டா வெறுப்பாய் அழுத்திக் கொண்டே , “ என்னடா தம்பி நீ.. இவ்ளோ மோசமாயிருக்க..” என்று என்னுடைய வெறுப்புக்கு ஒரு சொல் வடிவம் கொடுத்து நான் பேச...முதுகுக்குப் பின்னால் தம்பியின் குரல் பொறுமையாகக் கேட்டது.*

*“அண்ணே சிக்னல்ல நாம நின்னப்போ என்னோட செருப்பக் கழட்டி அவருக்குக் கொடுத்துட்டேன் அண்ணே...” என்று தெளிந்த நீரோடை போலச் சொன்னான் தம்பி.*